# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**13-11-2022**

**Wesite Link** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**Faceook Link** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

# விருது

## 1. ஸ்ரீ ரவிசங்கருக்கு காந்தி அமைதி யாத்திரை விருது

- மகாத்மா காந்தி மற்றும் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் ஆகியோரின் அமைதி மற்றும் அகிம்சைக் கொள்கைகளைப் பரப்புவதில் தொடர்ச்சியான முயற்சியை மேற்கொண்டுவருவதற்காக வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீ ரவிசங்கருக்கு 'காந்தி அமைதி யாத்திரை விருது' வழங்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் நடைபெற்ற நிகழ்வில், அந்நாட்டில் செயல்பட்டுவரும் காந்தி தொண்டு நிறுவனத்தின் சார்பில் வழங்கப்பட்ட காந்தி அமைதி யாத்திரை விருதை அவர் நேரில் பெற்றுக்கொண்டார்.
- இந்நிகழ்வில் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியரின் மருமகனான ஐசக் ஃபாரிஸ் மற்றும் அட்லாண்டாவில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் அதிகாரி டாக்டர் சுவாதி குல்கர்னி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 2. பேராசிரியர் வெங்கி ராமகிருஷ்ணனுக்கு பிரிட்டனின் உயரிய விருது

- தமிழ்நாட்டில் பிறந்த பேராசிரியர் வெங்கி ராமகிருஷ்ணனுக்கு பிரிட்டனின் 'ஆர்டர் ஆஃப் மெரிட்' என்ற உயரிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 1902-ஆம் ஆண்டு பிரிட்டன் அரசர் ஏழாம் எட்வர்ட் 'ஆர்டர் ஆஃப் மெரிட்' விருதை அறிமுகப்படுத்தினார்.
- அந்நாட்டு அரசர் அல்லது அரசியின் தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில், பாதுகாப்புப்படைகள், அறிவியல், கலை, இலக்கியம் உள்ளிட்டவற்றுக்கு தனிச்சிறப்பு மிக்க பங்களிப்பு வழங்கியவர்களுக்கு இந்த விருது அளிக்கப்படுகிறது.
- இந்நிலையில், பிரிட்டனில் உள்ள மூலக்கூறு உயிரியலாளரும் பேராசிரியருமான வெங்கி ராமகிருஷ்ணனுக்கு ( 70) 'ஆர்டர் ஆஃப் மெரிட்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவியலுக்கு அளித்த பங்களிப்புக்காக அவரை இந்த விருதுக்கு மறைந்த பிரிட்டன் அரசி இரண்டாம் எலிசபெத் தேர்வு செய்தார்.
- **நோபல் பரிசு பெற்றவர்:**
  - ✓ கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் பிறந்தவர் பேராசிரியர் வெங்கி ராமகிருஷ்ணன்.
  - ✓ அமெரிக்காவில் உயிரியல் படிப்பை மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து பிரிட்டன் சென்றார். அங்குள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மூலக்கூறு உயிரியல் ஆய்வகத்தின் குழுத்தலைவராக உள்ளார்.
  - ✓ 'உடலில் உள்ள செல்களில் இருக்கும் ரைபோசோம் அமைப்புகள்' குறித்த ஆராய்ச்சிக்காக வேதியியலுக்கான **நோபல் பரிசை கடந்த 2009-ஆம்** ஆண்டு பெற்றார்.

## மாநாடு

### 1. ஆசியான்-இந்தியா உச்சிமாநாடு

- ஆசியான்-இந்தியா இடையிலான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிதியத்துக்கு கூடுதல் பங்களிப்பாக 5 மில்லியன் அமெரிக்க டாலர்களை (ரூ.40 கோடி) இந்தியா அறிவித்தது.
- இந்திய குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் தலைமையிலான குழு, 3 நாள் சுற்றுப்பயணமாக கம்போடியாவுக்கு வந்தது. தலைநகர் நாம் பென்னில் நடைபெற்ற ஆசியான்-இந்தியா உச்சிமாநாட்டில் ஜகதீப் தன்கர் பங்கேற்று உரையாற்றினார்.
- ஆசியான் கூட்டமைப்பில் புரூணே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியத்நாம் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

## இந்திய செய்திகள்

### 1. தனி நபர் வருமானம்

- **தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013**-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது முதல் இந்திய மக்கள்தொகையின் **தனி நபர் வருமானம் 33.4 சதவீதம்** அளவுக்கு உயர்ந்துள்ளது' என்று உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது.
- 2013-14 கிராமப்புற மக்கள்தொகையில் 75 சதவீதத்தினரும், நகர்ப்புறங்களில் 50 சதவீதத்தினரும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த நிலை தற்போது குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.
- மத்திய அரசுக்கு மிகப்பெரிய மானியசுமையை ஏற்படத்திவருகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் இதுவரை 4.7 கோடிகுடும்ப அட்டைகள் கூடுதலாக வழங்கப்பட்டிருக்கின்றன.
- இந்தச்சட்டத்தின் கீழ் தேசிய அளவிலான பயனாளிகள் உச்ச வரம்பு 81.4 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இதுவரை 79.8 கோடிபேர் இந்தத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர். சில மாநிலங்கள், அந்த மாநிலங்களுக்கான பயனாளி உச்சவரம்பை இன்னும் பூர்த்தி செய்யவில்லை.
- அந்த வகையில், இந்தத் திட்டத்தின் கீழ் மேலும் 1.6 கோடி பயனாளிகள் சேர்க்கப்பட வாய்ப்புள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.